DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Sessions Judge,
Mahalir Neethimandram, Madurai.

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No. 101/2017** |
| Deposition of witness for | - P.W. 5 |
| Name | - ஜான்பீட்டர் |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15.12.2021

**முதல் விசாரணை:**

நான் மதுரை K.புதூரில் குடியிருந்து வருகிறேன். ரியல் எஸ்டேட் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். கடந்த 16.01.2016 ம் தேதி நானும் சகாயராஜ் என்பவரும் புதூரில் நின்று பேசிக்கொண்டு இருந்தோம். தொழில் நிமித்தமாக மதுரை தெப்பக்குளம் புது ராம்நாடு ரோட்டில் என்னுடைய இரு சக்கர வாகனத்தில் ரியல் எஸ்டேட் தொழில் ரீதியாக வந்த போது, ஆஜர் எதிரி குடியிருக்கும் வீட்டு பக்கம் கூட்டமாக இருந்தது. என்ன நடந்தது என்று விசாரித்த போது, எதிரி தனது மனைவி ரோசியை சுத்தியலால் அடித்து மதுரை அரசு ராஜாஜி மருத்துவவமனையில் சிகிச்சைக்கு சேர்த்திருந்தார்கள். அப்போது, சம்பவ இடத்தில் போலிசார் பார்வையிட்டு, படம் வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் வரைபடம் சம்பவ இடத்தில் வரைந்தது தான். **அந்த வரைபடம் அதசாஆ.3 ஆகும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் நானும் சகாயராஜும் இருந்த போது சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்டது. அதில் நானும் சகாயராஜும்**

**கையெழுத்து போட்டோம்.** பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **அந்த கையெழுத்து அதசாஆ.4 ஆகும.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

எனது வீடு K புதூரில் உள்ளது. நான் கத்தோலிக்க கிறிஸ்தவர். சாட்சி குழந்தைசாமி என்பவரும் கத்தோலிக்க கிறிஸ்தவர் ஆவார். நான் குழந்தைசாமி, சாகாயராஜ் ஆகியோர் புதூர் சர்ச்சை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். போலிசார் என்னைவிசாரித்த போது, என்ன வேலையாக சென்றேன் என்று கேட்டார்களா என்றால் கேட்டார்கள். நான் Electrican ஆக வேலை செய்கிறேன் எனாறல் சரியல்ல. ரியல் எஸ்டேட் பிஸ்னஸ் என்றால் என்ன வென்று எனக்குத் தெரியும். காலியாக உள்ள இடங்களை வாங்கி விற்பனை செய்வது தான் ரியல் எஸ்டேட் பிஸ்ன்ஸ் என்றால் சரிதான். ராம்நாடு, பழைய மீனாட்சிபுரம் ஏரிய ஜனங்கள் நடமாட்டம் உள்ள நெருக்கடி அதிகம் உள்ள பகுதியாகும். அந்த பகுதியில் காலியாக ஏக்கர் கணக்கில் இடங்கள் கிடையாது. நான் சம்பவ இடத்திற்கு செல்ல காரணம், சகாயராஜ் அழைத்தன் பேரில் தான் சென்றேன். சகாயராஜ் இரு சக்கர வாகனம் வைத்துள்ளார், ஆனால் நாங்கள் என்னுடையது வண்டியில் தான் சென்றோம் என்று சாட்சி தம்மிச்சையாக சொல்கிறார். போலிஸ் விசாரணையின் போது, நாங்கள் எந்த வண்டியில் சென்றோம், யார் வண்டியை ஓட்டினார்கள் என்ற விபரத்தை போலிசார் விசாரித்தார்கள், சொன்னேன். குழந்தைசாமி எனக்கு சித்தப்பா முறை வேண்டும். குழந்தைச்சாமி இந்த வழக்கு சம்பந்தமாக RDO விசாரணை செய்த போது நானும் உடன் இருந்தேன். குழந்தைசாமி சொல்லித்தான் காயம்பட்ட விபரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். நான் சென்ற காலகட்டம் பொங்கல் திருவிழா காலகட்டம் என்றால் சரிதான். பொங்கல் என்றால் ஒவ்வொரு பகுதியிலும், ஏரியா மக்கள் விழாக்கள் நடத்தில் கொண்டாடுவார்கள் என்றால் சரிதான். நான் சென்ற பகுதியிலும் விழாக்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தது. நான் அந்த பகுதிக்கு ஏற்கனவே போயிருக்கிறேன். நான் சென்றபோது, போலிசார் அங்கு இருந்து ஆட்களை விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். நான் சென்றவுடன் நான் காயம்பட்ட நபரின் உறவினர் என்று தெரிந்தவுடன் என்னையும் விசாரித்தார்கள். நான் சொல்லும் சம்பவ வீடு புதுராம்நாடு ரோட்டில் எந்த திசையில்

இருந்து எந்த திசை செல்லும் பகுதி என்றால், கிழக்கிலிருந்து வடக்கு நோக்கி பிரிந்து செல்கிறது. அந்த வீட்டை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் வாசல் வடக்கு திசை பார்த்து உள்ளது. போலிசார் கீழே நின்று விசாரித்து கொண்டிருந்த போது தான் என்னையும் அழைத்து கையெழுத்து வாங்கினார்கள். காயம்பட்டது தெரிந்தவுடன் நான் மருத்துவமனை சென்றேனா என்றால் நான் மருததுவமனை சென்றேன். மருத்துவமனையில் குழந்தைசாமி இருந்தாரா என்றால் RDO ஆபிசில் இருந்தார். RDO ஆபிசில் போலிசார் இருநதார்களா என்றால் நான் சென்றபோது இல்லை. RDO ஆபிசில் நான் விசாரணைக்கு சென்றுவிட்டு, அதன் பிறகு போலிசாரிடம் கையொப்பம் செய்தேன். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், என் முன்பு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றாலும், இந்த வழககில் ஒரு சாட்சி வேண்டும் என்பதற்காக நான் அசா1 ன் உறவினர் என்பதால் என்னை பின்னிட்டு சாட்சியாக சேர்த்து, ஆவணங்கள் பின்னிட்டு தயார் செய்து போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Sessions Judge,
Mahalir Neethimandram, Madurai.

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No.101/2017** |
| Deposition of witness for | - P.W.6 |
| Name | - சுரேஷ் |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15.12.2021

**முதல் விசாரணை:**

நான் கிராம நிர்வாக அதிகாரியா ஐய்ராவதநல்லூர் கிராமத்தில் பணிபுரிகிறேன். கடந்த 17.01.2016 அன்று நானும் கிராம உதவியாளர் வெங்கடாசலபதியும் பணிபுரிந்து கொண்டிருந்த போது, காலை 11 மணியளவில் தெப்பக்குளம் காவல் நிலையத்தில் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதற்காக அழைத்தார்கள். வெனீசின் மனைவி ரோசி என்பவரை கொலை செய்தது தொடர்பாக மதுரை பெரியார் பேருந்து நிலையம் சுண்ணாம்பு காரத்தெரு என்ற முகவரியில் கைது செய்து, மதுரை தெப்பக்குளம் காவல்நிலையத்தில் இருப்பதாகவும், அதற்கு ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க இருப்பதாகவும் என்னையும் என்னுடன் பணிபுரியும் உதவியாளர் வெங்கடாசலபதியையும் அழைத்தார்கள். நாங்கள் காவல்நிலையம் சென்றோம். எதிரியிடம் விசாரணை செய்து எவ்வித அச்சுருத்தலும் இல்லாமல் தெப்பக்குளம் காவல் நிலையத்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலம் 11.15 மணி முதல் 12 மணிவரை

ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்கள். எதிரி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் தனது வீட்டில் சுத்தியலை ஒளித்து வைத்திருப்பாதாக சொன்னார். அதன் பேரில் எதிரியை அழைத்துக்கொண்டு, போலிசாருடன் நானும், எனது கிராம உதவியாளரும் எதிரியின் வீட்டிற்கு சென்றோம். எதிரியின் வீட்டில் மதியம் 1, 1.15 மணியளவில் எதிரி சுத்தியலை எடுத்து ஆஜர் செய்தார். அதை அத்தாட்சியில் ஆய்வாளர் கைப்பற்றினார். **அந்த அத்தாட்சி அதசாஆ. 5 ஆகு**ம். என்னிடம் காட்டப்படும் **சுத்தியல் அசாபொ.1** ஆகும். பின்னர் நாங்கள் அனைவரும் காவல்நிலையத்திற்கு வந்தோம். **ஒப்புதல் வாக்குமூலததில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். அது அதசாஆ. 6 ஆகும**. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

நான் பணி செய்வது குறித்து தனியாக Manual உள்ளது என்றால் சரிதான். அதன்படி நான் எனது பணி சம்பந்தமாக எழுதி வட்டாட்சியரிடம் கொடுப்பது இல்லை. எனது அன்றாட பணிகள் குறித்து எதிலும குறிப்பிடுவது இல்லை. நான் பணி செய்த விபரங்களை அன்றாடம் டைரியில் எழுதி வட்டாட்சியருக்கு அனுப்பவேண்டும் என்றால் சரியல்ல. நான் பணி விபரங்களை எழுதி வட்டாட்சியருக்கு அனுப்பவேண்டும் என்றும், அது இந்த வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் நான் மறைக்கிறேன் என்றால் சரியல்ல. புது ராம்நாடு ரோடு, மீனாட்சிநகர் பகுதிக்கு தனியாக VAO,தலையாரி உள்ளார்கள் என்றால் சரிதான். அந்த ஏரியாவில் ஏதாவது பிரச்சனை நடந்தால், அது குறித்து தலவிசாரணை செய்து தகவல் விபரங்களை அனுப்ப வேண்டியது VAO தலையாரியின் கடமையாகும் என்றால் சரிதான். நான் தனியாக வேறு VAO வின் எல்லைக்கு சென்று விசாரணை செய்யவேண்டும் என்றாலோ, அறிக்கை தயாரிக்கவேண்டும் என்றாலோ, அதற்கான தனி உத்தரவோ, அனுமதியோ பெற வேண்டும் என்றால் சரிதான். எனக்கு ஆய்வாளர் செல்போன் மூலம் தகவல் கொடுத்தார். நான் முதல் விசாரணையில் சொன்னது போல், ஆய்வாளர் என்னிடம் செல்போனில் பேசுமபோது, எதிரி வெனீஸ் தனது மனைவியை கொலை செய்தது சம்பந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க உள்ளார் என்று சொன்னார். நான் தகவல் கிடைத்த எவ்வளவு நேரத்தில் எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் என்னுடையது இரு சக்கர வாகனத்தில் கால்மணி நேரத்தில் சென்றோம். நான் போவதற்கு முன்பு,

எவ்வளவு நேரத்தில் முன்பு அங்கு எதிரி இருந்தார் என்று எனக்குத் தெரியாது. நான் தெப்பக்குளம் காவல் நிலையத்திற்கு இதற்கு முன்பு சென்றிருக்கிறேன். தெப்பக்குளம் காவல் நிலையத்தில் நுழைந்தவுடன், ஆய்வாளர் அறை தனியாகவும், Computer அறை தனியாகவும் இருக்கும் என்றால் சரிதான். நான் ஆவணங்களில் ஆய்வாளரின் அறையில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூல ஆவணங்கள் யாரால் எங்கு வைத்து டைப் செய்யப்பட்டது என்று எனக்குத் தெரியாது. மீனாட்சிநகருக்கு இதற்கு முன்பு சென்றுள்ளேன். மகாத்மாகாந்தி தெரு என்பவது ஜன நெருக்கடி அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். என்னை போலிசார் விசாரித்தபோது, எங்கு வைத்து ஆயுதத்தை எடுத்துக்கொடுத்தார் என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தற்போது சாட்சியிடம் குவிமுச 161 வாக்குமூலத்தை காண்பித்த போது, அதில் குறிப்பிடவில்லை என்று சொல்கிறார். அந்த வீடு எத்தனை மாடி என்று ஞாபகம் இல்லை. அந்த வீட்டிற்கு கீழ் தளத்தில் வாசல் எந்த திசையில் உள்ளது என்றால் தெரியாது. அந்த வீடு, மதுரை டு புதுராமநாதபுரம் ரோட்டில் எந்த திசையில் உள்ளது என்றால் தென் திசையில் உள்ளது. பழைய மீனாட்சிநகரில், மகாத்மாகாந்தி தெரு ஏரியாவில் 6 தெருக்கள் வரை உள்ளது என்றால் தெரியாது. நான் சென்ற தெரு எத்தனையாவது தெரு என்று என்னால் சொல்லமுடியாது. நான் சொன்னதுபோல், சொன்ன விதத்தில், எதிரி என் முன்னிலையில் எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் அதசாஆ.6 ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. அசாபொ.1 சுத்தியலில் தனிப்பட்ட அடையாளம், குறியீடு எதுவும் உள்ளதா என்றால் இல்லை. இது போன்ற சுத்தியல் சாதரணமாக சந்தையில் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான். அசாபொ1 வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டு, ஒரு சாட்சி வேண்டும் என்பதற்காக என்னை பொய்யாக சாட்சி பட்டியலில் சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Sessions Judge,
Mahalir Neethimandram, Madurai.

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No.101/2017** |
| Deposition of witness for | - P.W. 7 |
| Name | - வெங்கடாசலபதி |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15.12.2021

**முதல் விசாரணை:**

நான் தற்போது மீனாட்சிபுரம் தலையாரியாக பணிபுரிகிறேன். கடந்த 17.01.2016 அன்று நான் அய்ராவதநல்லூரில் கிராம உதவியாளராக பணிபுரிந்தேன். அப்போது அசா6 சுரேஷ் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்தார். நானும் VAO வும் அலுவலகத்தில் இருந்த போது, தெப்பக்குளம் காவல் நிலையத்தில் இருந்து வெனீஸ் த/பெ.அலெக்சான்டர் என்பவர் காவல் நிலையத்தில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பதற்காக வந்துள்ளார், கிராம நிர்வாக அலுவலர் சுரேஷ் என்பவரும், நானும் தெப்பக்குளம் காவல்நிலையத்திற்கு போனோம். எதிரி வெனீஸ் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில், தான் தனது மனைவி ரோசியை சுத்தியலால் அடித்து கொலை செய்ததாகவும், எதிரி சுண்ணாம்புகாரத் தெரு VR Digital அருகே விசாரித்தார்கள். மகாத்மாகாந்தி தெரு, பழைய ராம்நாடு ரோட்டில் எதிரி சொன்னதன் பேரில் எதிரியின் வீட்டில் அந்த சுத்தியலைக் கைப்பற்றினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அது

**அதசாஆ. 7 ஆ**கும். என்னிடம் காட்டப்படும் சுத்தியல் அசாபொ.1 தான் எதிரி வீட்டில் கைப்பற்றியது. அதற்கான அத்தாட்சியில் நான் கையெழுத்து போட்டோன். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில், உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி,**

ஆய்வாளர் என்னை கூப்பிடும் போது நான்  கிராம நிர்வாக அலுவலக அதிகாரி அலுவலகத்தில் இருந்தேன். ஆய்வாளர் என்னை செல்போனில் தான் கூப்பிட்டார். ஆய்வாளர் செல்போனில் அழைத்தால் காவல்நிலைய எண் வரும் என்றால் சரிதான். நான் காவல்நிலையத்திற்கு அடிக்கடி செல்வேன் என்றால் சரிதான். அதனால் போலிசார் விசாரணைக்கு உதவி வேண்டும் என்றால் என்னையும், VAO வையும்அடிக்கடி கூப்பிடுவார்கள் என்றால் சரிதான். எனக்கும், VAO விற்கும், போலிசார் விசாரணைக்கு உதவ வேண்டும் என்று உத்தரவு உள்ளது என்றால் சரிதான். VR Digital  என்ற நிறுவனத்தின் முன்பு போலிசார் விசாரித்த போது தான் நான் பார்த்தேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் செல்வதற்கு எவ்வளவு நேரம் அல்லது நாட்களுக்கு முன்பு இருந்து எதிரி காவல்நிலையத்தில் இருந்தார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. பழைய மீனாட்சிநகர் பகுதிக்கு தனியாக கிராம நிர்வாக அதிகாரி மற்றும் தலையாரி  உள்ளார்கள். நான் எங்களுக்கு தகவல் வந்தவுடன் அந்த பகுதி கிராமநிர்வாக அதிகாரியையோ, தலையாரியையோ தொடர்புகொள்ளவில்லை. நான் செல்வதற்கு முன்பு காவல்நிலையத்தில் போலிசார், எதிரியைத் தவிர வேறுயாரும் இருந்தார்களா என்றால் இல்லை. எனக்கும், VAO சொன்னதன் பேரில் தான் ஆவணங்களில் கையொப்பம் செய்தேன் என்றால் என் முன்னிலையில் தான் விசாரித்தார்கள். என் முன்பு விசாரணை செய்வதற்கு முன்பு, போலிசார் எதிரியை எத்தனை முறை விசாரித்தார்கள் என்று எனக்குத் தெரியாது. அது சம்பந்தமாக நானும், அசா6 ம் தெரிந்துகொள்ளவில்லை. சம்பவம் நடந்த வீட்டின் ரோடு எந்த திசையில் எவ்வளவு தூரம் உள்ளது என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் காவல்நிலையத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு இரு சக்கர வாகனத்தில் சென்றோம். நாங்கள் சம்பவ இடம் சென்றபோது, எதிரி எங்களுடன் வரவில்லை. இரு சக்கர வாகனத்தில் நாங்கள் சென்ற போது, போலிசார் நாங்கள் செல்வதற்கு முன்பாகவே சம்பவ இடத்தில் இருந்தார்கள். நான் யாருடன் சம்பவ இடம் சென்றோம் என்றால் நானும VAO வும் சம்பவ இடத்திற்கு

சென்றோம். சம்பவ இடம் குறித்து எனக்கு வழி சொன்னது யார் என்றால் காவல் நிலைய அதிகாரி ஆவார். எங்களுடன் வழிகாட்ட எந்த காவல் அதிகாரி வந்தார் என்றால் சார்பு ஆய்வாளர் என்று நினைக்கிறேன். நான் முதன் முதலில் இந்த வழககு சம்பவம் தொடர்பாக எத்தனை மணிக்கு எங்குவைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சுமார் 1 மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். நான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்த போது, எங்களுக்கு வழிகாட்டிய சார்பு ஆய்வாளர் இருந்தார். நாங்கள் சம்பவ இடம் சென்ற போது வீடு பூட்டி இருந்ததா மற்றும் அங்கு யார் இருந்தார்கள் என்றும் ஞாபகம் இல்லை. நான் சென்றபோது, நான், எதிரி தவிர வேறு யாரிமும் கையொப்பம் பெற்றார்களா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. VAO விற்கும், எனக்கும் தனியாக அலுவலக சீல் உள்ளது என்றால் VAO விற்கு மட்டும் உள்ளது. பொதுவாக VAO கையெழுத்து போட வேண்டும் என்றால் நான் அலுவலக சீல் வைத்து தருவது எனது பணி என்றால் சரிதான். அபிடவிட் போன்ற ஆவணங்களில் நான் மேல் ஒப்பம் செய்ய வேண்டும் என்றால் அரசுக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களில் ஒவ்வொரு பக்கத்திலும் மேல்ஒப்பம் செய்யவேண்டும். அதசாஆ.6 ல் VAO சீலோ, எனது கையொப்பத்திற்கு கீழ் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதசாஆ.6 ஒப்புதல் வாக்குமூலத்தின் 1,2 பக்கத்தில் யாருடைய கையொப்பமும் பெறவில்லை எனற்ால் சரிதான். நான் சொன்னது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் எவ்வித சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக பின்னிட்டு சாட்சியாக சேர்க்கப்பட்டு VAO சொன்னதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசாபொ1. ல் எவ்வித தனிப்பட்ட குறியீடும் இல்லை. இது போன்ற சுத்தியல் சாதாரணமாக சந்தையில் கிடைக்கும் என்றால் சரிதான்.

போலிசார் அசாபொ1. ஐ எந்த இடத்தில் வைத்து கைப்பற்றினார்கள் என்ற விபரம் பற்றி எனக்குத் தெரியாது. போலிசார் வந்து, என்னிடமும், VAO விடமும் சுத்தியலை காட்டிய பிறகு தான் வழககில் சம்பந்தப்பட்டது என்று தெரிந்து கொண்டேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை.